## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.67/2015 நாள்– 23.01.2026

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.சு.தனபாக்கியம், Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– M.சங்கரசுப்புராஜ்(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் 2வது வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 04.01.2004 – மின்சார வாரிய அறிவிப்பு – அசல் – **வா.சா.ஆ.1**

2) 16.04.2004 – மின்வாரிய ரசீது – அசல் – **வா.சா.ஆ.2**

3) 03.10.2016 – புல எண்.644 வருவாய் அலுவலக வரைபடம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.3**

4) 06.10.2012 – காவல் நிலைய புகார் ரசீது – அசல் – **வா.சா.ஆ.4**

5) 08.10.2012 – நில அளவை ஆவணம்/பட்டா – அசல் – **வா.சா.ஆ.5**

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**